**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 195/ 2015**

2021 ஆம் ஆண்டு அக்டோபர்மாதம் 29-ம் நாள் வெள்ளிக்கிழமை என்பவரது சாட்சியாகிய இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி செல்வி. வெ. பார்கவி B.A.,B.L.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 29.10.2021 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | கலாவதி (PW-1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| சாதி: | | வயது : | |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை: 29.10.2021**

நான் இவ்வழக்கின் முதல் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

எனது மாமனார் பெயர் சுப்பிரமணியன். 13.10.2014 தேதியிட்ட 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு நான் எனது வழக்கறிஞர்மூலம் அனுப்பிய வழக்கறிஞர்அறிவிப்பின்

அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.10.2014 தேதியில் வா.சா.ஆ.1 அறிவிப்பை முதல்பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல்அட்டையின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.10.2014 தேதியில் வா.சா.ஆ.1 அறிவிப்பை2 ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.10.2014 தேதியில் வா.சா.ஆ.1 அறிவிப்பை 3 ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதற்கான அஞ்சலக உறையின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.07.2015 தேதியிட்ட தாவாச்சொத்தைப் பொறுத்து கணினி வழியாக பெறப்பட்ட கணினி சிட்டாவின்(பட்டா எண்.316) நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடா்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**